**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர், நாள்.30.06.2020**

2020ம் ஆண்டு ஜுன் மாதம் 30.06.2020ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு. தே,கிருஷ்ணமூர்த்தி எம்.காம்.,
ஆணையாளர் (ம)தனிஅலுவலர்

1) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுன் 2020ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**( ந.க.எண்.1103/2020/சி1).**
**தீர்மான எண் : 141** பதிவு செய்யப்பட்டது.

2) இந்நகராட்சிப் பொறியாளர் அவர்களின் ஜுன் 2020ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**( ந.க.எண்.1103/2020/சி1).**
**தீர்மான எண் : 142** பதிவு செய்யப்பட்டது.

3) இந்நகராட்சி நகர்நல அலுவலர் அவர்களின் ஜுன் 2020ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**( ந.க.எண்.1103/2020/சி1).**
**தீர்மான எண் : 143** நாட்குறிப்பு வழங்கவில்லை.

4) போடிநாயக்கனூர் நகராட்சி தோற்றுவிக்கப்பட்டு நூறாண்டுகள் நிறைவடைந்ததையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19.03.2020 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110—ன் கீழ் போடிநாயக்கனூர் நகராட்சிக்கு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு ரூ.50.00/— கோடி சிறப்பு நிதி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் போடிநாயக்கனூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் ஓடுதளம் அமைத்தல், அலங்கார வளைவு அமைத்தல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல், வாரச்சந்தை அமைத்தல், தினசரி மார்க்கெட் அமைத்தல், மின்வசதி மற்றும் தண்ணீர் வசதி செய்தல், திடக்கழிவுகளை பயோமைனிங் முறையில் அகற்றுதல், பூங்காக்களை மேம்படுத்துதல், பொது சுகாதாரப் பிரிவு அலுவலகம் கட்டுதல், நகராட்சி பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுதல், பழைய கழிப்பிடங்களை அகற்றிவிட்டு புதிய கழிப்பிடங்கள் கட்டுதல், பாதாள சாக்கடை குழாய்கள் பதித்தல், சாலைகள் சீரமைக்கும் பணி மேற்கொள்ளுதல், மழைநீர் வடிகால் கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூ.50.00/— கோடி வழங்குவதற்கு கொள்கை அளவில் அனுமதி வழங்கி பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.59 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.06.2020 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**ந.க.எண்.885/2020/இ1**
**தீர்மான எண் : 144** பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**5)** அ) இந்நகராட்சி பாதாள சாக்கடைத்திட்டத்தின் சாலைகாளியம்மன் கோவில் அருகில் உள்ள துணை கழிவுநீர் உந்து நிலையத்தில் **90**HP நீர்மூழ்கி நீர்மோட்டாரின் அடிபாகத்தில் உள்ள M.S. bottom பிளேட் பழுதடைந்துள்ளதை புதிதாக வாங்கி பொருத்துவதற்கு ஆகும் செலவினம் ரூ.**29,960/–**க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

ஆ) மேலும் மேற்படி பணியினை செய்வதற்கு அவசர அவசியம் கருதி **05.06.2020**அன்று நேரிடையாக விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சரவணக்குமார் இன்ஜினியரிங் ஒர்க், தேனி. | ரூ.30,800/– |
| 2 | P. ரவிசந்திரன் , ஒப்பந்ததாரர், தேனி. | ரூ.31,696/– |
| 3 | M. வைகுண்டம் ரீவைண்டிங் & இன்ஜினியரிங் ஒர்க்ஸ், தேனி | ரூ.29,960/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் M.வைகுண்டம் ரீவைண்டிங் & இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,தேனி நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1317/2020/இ1)**

**தீர்மான எண் : 145** அனுமதி வழங்கப்பட்டது.

**6)** அ) இந்நகராட்சி பாதாள சாக்கடைத்திட்டத்தின் சாலைகாளியம்மன் கோவில் அருகில் உள்ள துணை கழிவுநீர் உந்து நிலையத்தில் **90**HP மோட்டாரின் உள்ள கப்ளர் கிளாம்ப் பழுதடைந்துள்ளதை புதிதாக Bolt-Nut set பொருத்துவதற்கு ஆகும் செலவினம் ரூ.8691/-க்கு செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

ஆ) மேலும் மேற்படி பணியினை செய்வதற்கு அவசர அவசியம் கருதி **01.06.2020**அன்று நேரிடையாக விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சரவணக்குமார் இன்ஜினியரிங் ஒர்க், தேனி. | ரூ.9419/– |
| 2 | P. ரவிசந்திரன், ஒப்பந்ததாரர், தேனி. | ரூ.10002/– |
| 3 | M.வைகுண்டம் ரீவைண்டிங் & இன்ஜினியரிங் ஒர்க்ஸ், தேனி | ரூ.8691/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் M.வைகுண்டம் ரீவைண்டிங் & இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,தேனி நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1315/2020/இ1)**

**தீர்மான எண் : 146** அனுமதி வழங்கப்பட்டது.

7) அ) இந்நகராட்சி பாதாள சாக்கடைத்திட்டத்தின் சாலைகாளியம்மன் கோவில் அருகில் உள்ள துணை கழிவுநீர் உந்து நிலையத்தில் 50HP சப்மோட்டாரின் உள்ள பம்பு பிளேட்டில் உள்ள Bolt-Nut set பழுதடைந்துள்ளதை புதிதாக பொருத்துவதற்கு ஆகும் செலவினம் ரூ.9923/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

ஆ) மேலும் மேற்படி பணியினை செய்வதற்கு அவசர அவசியம் கருதி **03.06.2020**அன்று நேரிடையாக விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **நிறுவனம்** | **தொகை** |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சரவணக்குமார் இன்ஜினியரிங் ஒர்க், தேனி. | ரூ.10875/– |
| 2 | P. ரவிசந்திரன், ஒப்பந்ததாரர், தேனி. | ரூ.11570/– |
| 3 | M. வைகுண்டம் ரீவைண்டிங் & இன்ஜினியரிங் ஒர்க்ஸ், தேனி | ரூ.9923/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் M.வைகுண்டம் ரீவைண்டிங் & இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,தேனி நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1316/2020/இ1)**

**தீர்மான எண் : 147** அனுமதி வழங்கப்பட்டது.

8) இந்நகராட்சி புதிய கூடுதல் குடிநீர் திட்டம் செயல்படுத்திட உபவிதிகளை மாவட்ட அரசிதழில் சிறப்பினமாக வெளியிடுவதற்கு ஒரு பக்கத்திற்கு ரூ.2100/– வீதம் நான்கு பக்கங்கள் வருவதால் ரூ.8400/ஐ அரசு கணக்கு தலைப்பில் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:713/2015/இ1)**

**தீர்மான எண் : 148** அனுமதிக்கப்பட்டது.

9) போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் நூற்றாண்டு நிறைவாக புதிதாக கட்டப்பட உள்ள கட்டிடங்களுக்கு மண் பரிசோதனை செய்ய (SBC) போடிநாயக்கனூர் அரசு பொறியியல் கல்லூரிக்கு தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேலும் அன்னார் அனுப்பிய கடித எண்.GCE/PCE/Soil/2020/82C. நாள்.29.05.2020–ல் மண் பரிசோதனை செய்வதற்கு நாள் ஒன்றுக்கு 8 ஆண் பணியாட்கள் மற்றும் தளவாடங்களை பணியிடங்களுக்கு கொண்டு செல்ல ஒரு மினி ஆட்டோ நகராட்சி மூலம் வழங்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் ஒன்பது இடங்களில் தலா இரண்டு மாதிரி வீதம் பரிசோதனை செய்ய இருப்பதால் உத்தேசமாக 10 நாட்கள் ஆகும். மேற்படி பணிக்கு பணியாளா் மற்றும் வாகன வாடகை உத்தேச செலவினம் ரூ.70,000/–ஐ மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**(ந.க.எண்.1530/2020/இ1)**

**தீர்மான எண் : 149** அனுமதிக்கப்பட்டது.

10) இந்நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் குடியிருப்பில் உள்ள மரகதவு மற்றும் மரஜன்னல்களில் கரையான் தொற்று ஏற்பட்டு உள்ளது. கரையான் தொற்று ஏற்படாமல் இருக்க கிருமி நாசினி சுவற்றில் துளை அமைத்து தெளிக்கும் பணிக்கு ஆகும் செலவினம் ரூ.10,000/–ஐ மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**ந.க.எண்.1531/2020/இ1**

**தீர்மான எண் : 150** அனுமதிக்கப்பட்டது.

**11)** இந்நகராட்சிக்கு 2020–2021–ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், பேரேடுகள் கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 (பதினைந்து லட்சம்)–ஐ இந்நகராசி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.1080/2020/பி2**

**தீர்மான எண் : 151** அனுமதிக்கப்பட்டது.

**12)** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TATA ACE TN60A6042 வாகனத்திற்கு புதிதாக டயர்களை மாற்றி வழங்குவதற்கு 15.06.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | VISHWAK TYRRES, BODI | ரூ.10,000/– |
| 2 | MS WHEEL ALIGNSS , THENI | ரூ.10,600/– |

பொது சுகாதார அவசர அவசியம் கருதி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் M/s VISHWAK TYRRES, போடிநாயக்கனூர். டயர்ஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:956/2020/எச்2)**

**தீர்மான எண் : 152** அனுமதிக்கப்பட்டது.

**13) அ)** போடிநாயக்கனூர் நகராட்சியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதற்கான செலவினம் ரூ.20,00,000/–த்திற்கு ஏற்கனவே இந்நகர் மன்ற தீர்மான எண்.86. நாள்.02.04.2020 ல் மன்ற அனுமதி பெற்று செலவுகள் மேற்கெள்ளப்பட்டு வந்தநிலையில் மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் (STATE DISASTER RESPONSE FUND) சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து கடிதம் எண் 3336/J2/2020 நாள் 24.03.2020, 09.04.2020 மற்றும் 23.04.2020 ஆக மூன்று தவனையாக ரூ.3,50,000/–, ரூ19,00,000/– மற்றும் ரூ15,00,000/– ஆக மொத்தம் ரூ37,50,000/– வரப்பெற்றது. இதுவரை மொத்தமாக ரூ.39,39,116/– செலவினம் செய்யப்பட்டுள்ளது அதில் மாநில பேரிடர் மேலாண்மை நிதி ரூ37,50,000/– போக மீதமுள்ள தொகை ரூ.1,89,116/– ஐ மேற்கண்ட இந்நகர் மன்ற தீர்மான எண்.86. நாள்.02.04.2020 ல் மன்ற அனுமதி பெற்ற ரூ.20,00,000/– ல் செலவுகள் மேற்கொள்ளப்பட்டு மீதம் ரூ.18,10,884/– உள்ளது. தற்போது இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரொனா வைரஸ் நோய் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக உள்ளதாலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின் படி கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் வகையில் நகர் முழுவதும் கிருமி நாசினி தெளிக்கும் பொருட்டு பொது சுகாதார பணி பாதிப்படையா வண்ணம் தனியாரிடமிருந்து வாடகைக்கு TATA ACE வாகனம் மூலம் கிருமி நாசினி தெளிக்கும் பணி மேற்கொள்ளவும், மேலும் சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசல், Personal Protective Equipment, முகவுறை, கையுறை, lizol, மற்றும் சுண்ணாம்புதூள் போன்றவை கையிருப்பு குறைவாக உள்ளதால் ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட அதே நிறுவனங்களில் இருந்து கொள்முதல் செய்யவும் மேற்படி செலவினங்களை மன்ற அனுமதி பெறப்பட்டு செலவு செய்தது போக மீதமுள்ள தொகை ரூ.18,10,884/– ல் இருந்து மேற்கொன்டு கொரோனா தடுப்பு நிதி வரப்பெற்றால் அதனை ஈடுசெய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ஆ)** மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின் படி இந்நகராட்சி பகுதிகளில் பொது மக்கள் முகவுறை அணியாமல் வெளியே நடமாடினால், அவர்களுக்கு ரூ.200/– வீதம் அபராதம் விதிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதால் அபராத இரசீது புத்தகம் அச்சிடுவதற்கும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.956/2020/எச்2**

**தீர்மான எண் : 153** அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி